Excavation Activities of

# Department of Archaeology
# Government of Tamilnadu

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறையின்

அகழாய்வுப் பணிகள்

# தொல்பொருள் ஆய்வுத்துறையின் அகழாய்வுப் பணிகள்

*வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த சின்னங்களைத் தொல்பொருள் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு ஏற்பப் பாதுகாத்தல், மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளத் தொல்பொருள் ஆய்வுத்துறை 1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்கான சட்ட வடிவமைப்பு 1966-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன் பிறகு இத்துறையில் 1. கல்வெட்டுப் பிரிவு 2. அகழாய்வுப் பிரிவு 3. பழம்பொருட் பதிவுப் பிரிவு 4. மாவட்டத் தொல்பொருள் அலுவலர்கள் பிரிவு 5. அச்சுப் பிரிவு 6. அகழ் வைப்பகப் பிரிவு 7. தொல்லியல் இரசாயனப் பிரிவு 8. நூலகப் பிரிவு 9, நிழற்படப் பிரிவு ஆகிய பிரிவுகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.*

**அகழாய்வு செய்யப் பெற்றுள்ள இடங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஆனைமலை | கோவை மாவட்டம் |
| 2. | போளுவாம்பட்டி | |
| 3. | கொற்கை | வ. உ. சி. மாவட்டம் |
| 4. | பாஞ்சாலங்குறிச்சி | |
| 5. | கரூர் | திருச்சி மாவட்டம் |
| 6. | கண்ணனூர் | |
| 7. | கங்கைகொண்ட சோழபுரம் | |
| 8. | பழையாறை | தஞ்சை மாவட்டம் |
| 9. | குறும்பன்மேடு | |
| 10. | கோவலன் பொட்டல் | மதுரை மாவட்டம் |
| 11. | தொண்டி | இராமநாதபுரம் மாவட்டம் |
| 12. | அழகன்குளம் | |
| 13. | பல்லவமேடு | செங்கை-அண்ணா மாவட்டம் |
| 14. | வசவசமுத்திரம் | |

## அகழாய்வு செய்யும் இடங்களைத் தெரிவு செய்யும் முறை

இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள் வாயிலாகத் தமிழகத்திலுள்ள தொன்மையான இடங்கள், பண்டைய மன்னர்கள், குறுநில மன்னர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. இதன் அடிப் படையில் அகழாய்வு செய்யும் இடங்கள் தெரிவு செய்யப்படுகின்றன பண்டைய மாநகரங்களின் பட்டியலின் அடிப்படையில், அகழாய்வா ளர்கள் மேற்குறித்த நகரங்களில் மேற்பரப்பு ஆய்வினை மேற்கொள் கின்றனர். எதற்காகவேனும் தோண்டும்போது, பூமிக்கடியில் கட்டடப் பகுதிகள் அல்லது பழமையான பொருள்கள் கிடைக் கின்றனவா என்று கேட்டறிகின்றனர். அதன் பின்னர் அப்பகுதியில் மேற்பரப்பு ஆய்வு செய்து, மண்மேடு ஏதேனும் உள்ளதா' தொல்பொருட்கள் ஏதேனும் கிடைக்கின்றனவா என்று ஆய்வு செய்கின்றனர். மண் மேடுகள் என்பன பண்டைய மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்களாகும். பகை அரசர்களின் படையெடுப் பால் மக்கள் வாழ்ந்த பகுதிகள் இடிபாடுகளுக்கு உட்பட்டு மண் மேடுகள் ஆகியிருக்கக் கூடும். அல்லது இயற்கையின் சீற்றத்தினால் ஓரிடத்தில் வாழ்கின்ற மக்கள் பிழைப்பிடம் கருதி வேறு இடங் களுக்குச் சென்றதும், கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து மண் மேடாவ துண்டு. இத்தகைய மண்மேட்டுப் பகுதிகளில் வேளாண்மை செய்யும் பொருட்டு கிராம மக்கள் உழும்போது பல்வகைக் கலைப் பொருட் களைக் கண்டெடுப்பதும் உண்டு. சில சமயங்களில் குழி தோண்டும் போது கட்டடப் பகுதிகளோ உறை கிணறுகளோ காணக் கிடைப்ப துண்டு. இவை இப்பகுதிகளில் மக்கள் வாழ்ந்ததற்கான தடயங் களாக விளங்குகின்றன. இந்த இடங்களிலும் அகழாய்வு மேற் கொள்ளப்படுகின்றது.

சான்றாகத் திருச்சி மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தை அடுத்த ‘உட்கோட்டை’ என்ற பகுதியில் கிராம மக்கள் விவசாயம் செய்வதற்கு உழுகின்றபொழுது பல வண்டிகளில் ஏற்றுமளவிற்குச் செங்கற்களைத் தோண்டி எடுத்துள்ளனர். இந்தச் செய்தி இத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு உடனடியாக இத்துறை அகழாய்வாளர்கள், அப்பகுதியில் கள

ஆய்வு செய்வதற்கு அனுப்பப்பட்டனர். கள ஆய்வின்பொழுது ஒரு பெரிய மண்மேடு இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பிறகு அவ்விடத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு, சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரனால் கட்டப்பட்ட அரண்மனைப் பகுதிகள் வெளிக் கொணரப்பட்டன. இதைப் போன்று இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் என்ற இடத்திலும் அகழாய்வாளர்களால் மேற்பரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பெற்று இத்துறையால் அகழாய்வும் செய்யப்பட்டது. பல்வேறு கலைப்பொருள்கள் கண்டெடுக்கப் பட்டன. இவ்வூர் 'தென்பாண்டி நாட்டின் அரிக்கமேடு' என்று அகழாய்வாளர்களால் போற்றப்படுகிறது.

## அகழாய்வு செய்யப் பெற்றுள்ள சில முக்கிய இடங்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அகழாய்வு செய்யப் பெற்றுள்ள இடங்களில் மிகவும் முக்கியமானவை வ. உ. சி. மாவட்டத்தில் உள்ள கொற்கை, திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூர், கங்கைகொண்ட சோழபுரம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அழகன்குளம் ஆகிய இடங்களாகும். இப்பகுதியில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள் மற்றும் தொன்மை வாய்ந்த கலைப் பொருட்களின் மூலம் தென்னிந்தியாவிற்கும் வட இந்தியா விற்கும் நிலவிய வாணிபத் தொடர்பு, உரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. கொற்கையில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைக்கப் பெற்ற கரித்துண்டு, பம்பாயிலுள்ள டாட்டா அடிப்படை ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப் பெற்றது. இந்தக் கரித்துண்டுகள் கி. மு. 785-ஆம் ஆண்டைச் சார்ந்தவை என்று கணித்துள்ளனர். இந்தச் சான்றின் மூலம் இங்கு சுமார் கி. மு. 800-இல் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள பானை ஓடுகள் கொற்கை அகழாய்வில் கிடைத்துள்ளன. இங்கு சங்கு வளையல் துண்டுகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. எனவே சங்கு அறுக்கும் தொழில் இங்கு சிறந்து விளங்கியிருக்கிறது என்பது தெரிகிறது.

கரூரில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்துள்ள தொல் பொருட்களை ஆராயும்போது, சங்க காலச் சேரர் தலைநகர் கரூர் என்பதும், அதன் பழமையும் தெளிவாகிறது. அழகன்குளம் அகழாய்வின் மூலம் உரோமானியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தங்கி வாழ்ந்தமைக்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

அழகன்குளம், கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் விரிவான முறையில் அகழாய்வினை மேற்கொண்டால், சங்க காலம் மற்றும் இடைக் காலச் சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினைத் தெரிந்து கொள்வதற்கு வழி வகுக்கலாம் என்பதில் ஐயமில்லை. இவ்வகழாய்வின் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், தொழில் முறை, சமயம் ஆகியவற்றைப் பற்றிப் பெரிதும் தெரிந்து கொள்ள முடியும்.

## அகழாய்வு செய்யப்படவுள்ள இடங்கள்

தமிழ் நாட்டில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மலையமான்களின் தலைநகரான திருக்கோயிலூர், காடவராயர்களின் தலைநகரான சேந்தமங்கலம், சம்புவராயர்களின் தலைநகரான படைவீடு, ஆய் மன்னர்களின் தலைநகரான பார்த்திவசேகரபுரம் மற்றும் சங்க காலத்தைச் சார்ந்த திருத்தங்கல் ஆகிய இடங்களில் இத்துறையால் அகழாய்வு செய்யப்படவுள்ளது.

## ஆழ்கடல் அகழாய்வு

தமிழ்நாட்டில் கீழைக் கடற்கரையில் சிறப்பு வாய்ந்த பல துறைமுகப் பட்டினங்கள் உள்ளன. சதுரங்கபட்டினம், காவிரிப்பூம் பட்டினம், தரங்கம்பாடி, காரைக்கால், பெரியபட்டினம் ஆகிய துறைமுகப் பட்டினங்கள் மேலை நாட்டார் குறிப்புகளிலும் சங்க இலக்கியங்களிலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளால் அழிந்து விட்டது என்று கூறப்படுகிறது. இவ்வுண்மையினை ஆராயும்வகையில் கடலில் மேற்பரப்பு ஆய்வினைத் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையும், கோவாவிலுள்ள தேசியக் கடலாய்வு நிறுவனமும்

இணைந்து மேற்கொண்டன. நவீன அறிவியற் கருவிகளைக் கொண்டு சுமார் 30 மீட்டர் ஆழத்தில் சில மேடுகள் பூம்புகார்ப் பகுதியில் கடலுக்கடியில் இருப்பது கண்டறியப்பட்டது. இந்த மேடுகள் சங்க காலத்திற்கு முந்தியதாகவோ, சங்க காலத்தைச் சேர்ந்ததாகவோ இருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர், கலைஞர். கருணாநிதி அவர்கள், 1990-91-ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையில் பூம்புகாரில், ஆழ்கடலாய்வு மூன்றாண்டு முனைப்புத் திட்டமாகத் தேசிய கடலாய்வு நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படவுள்ளது. என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

# தொல்பொருள் ஆய்வுத்துறையின் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்

## 1. தமிழிக் கல்வெட்டு

*(அ) காயிதே மில்லத் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், உண்டாங் கல்லுப் பகுதியில் கல் படுக்கையில் பண்டைத் தமிழ்க் கல்வெட்டு இத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டில், 'ஏரயல் அரகாயதன் செவ்விதோன்' என எழுதப்பட்டுள்ளது. ஏரயல் என்பது ஒரூரின் பெயராக இருக்கலாம். அவ்வூரைச் சார்ந்த அரகாயதன் என்பவன் இப்படுக்கையைச் செய்தளித்தான் என்பது தெரிய வருகிறது.*

*(ஆ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் உள்ள திருமலையில் காணப்படும் இயற்கையான இரண்டு குகைத்தளங் களின் முகட்டில் இரு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. முதல் குகைக் கல்வெட்டில் "எக்காடுஊரு காவிதிகன் கொறிய பாளிய்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. எக்காட்டூரைச் சார்ந்த காவிதிகன் என்பவன் அளித்த படுக்கை என்று பொருள்படும்.*

## 2. *(அ)* பல்லவர் காலச் சிற்பம்

*வடார்க்காடு மாவட்டம், பொன்னூர் என்ற இடத்தில் பல்லவர் காலத்தைச் சார்ந்த சிவன், திருமால், பிரம்மாவின் அடையாளங் களுடன் தோற்றம் அளிக்கும் கற்சிலை ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இத்துடன் திருவல்லம் என்ற இடத்தில் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகிய வேலைப்பாடு கொண்ட கல் தொட்டி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

### (ஆ) பல்லவர் காலச் சிற்பங்கள் - திரிமூர்த்தி

*தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில், திருவா மாத்தூர் என்னும் சிற்றூரில் உள்ள அபிராம ஈசுவரர் கோயிலின்*

திருச்சுற்றில் லிங்கோத்பவர் அல்லது திரிமூர்த்தியின் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உருவ அமைதியினை நோக்கும்போது இது பல்லவர் காலத்திய கலைப் பாணியுடன் காணப்படுகிறது. இப்புடைப்புச் சிற்பத்தின் நடுவில் லிங்க உருவமும், இடப்புறம் திருமாலும், வலப்புறம் பிரம்மனுமாக வடிக்கப்பட்டுள்ளனர்.

## 3. பல்லவர் காலக் காசு

சென்னையை அடுத்த திருவான்மியூரில் இருந்து பல்லவர் காலக் காசு ஒன்றினை இத்துறை சேகரித்துள்ளது. ஈயத்தால் ஆன இக்காசில் முன் பக்கத்தில் நந்தியின் உருவமும், பின்புறம் சைத்திய மரமும் ஒரு குடமும் காணப்படுகின்றன. முற்காலப் பல்லவரால் வெளியிடப்பட்ட காசு இது. கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.

## 4. குறிஞ்சிப்பாடியில் தங்கக் காசுகள்

தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடிக்கு அருகே உள்ள வரதராசன் பேட்டையில் 77 தங்கக் காசுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்காசுகள் கங்க, காகதீய, விஜயநகர மன்னர்கள் காலத்தைச் சார்ந்தவைகளாகும். இத்துடன் தங்கத்தால் செய்யப்பட்ட வளையல்களும், தங்கத் துண்டுகளும் கிடைத்துள்ளன. அனைத்துக் காசுகளும் தங்கத்தால் செய்யப்பட்டவை. ஒருபுறம் 'கணப' எனத் தமிழ் எழுத்துக்களும், கண்ணன் குழல் ஊதுகின்ற நிலையிலும் சூரியன், சந்திரன், குடை ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன. பின்புறம் சில கோடுகள் காணப்படுகின்றன. இவை காகதீய மன்னன் கணபதி என்பவரால் வெளியிடப்பட்டதாகும்.

## 5. பண்டைய சுடுமண் படிமங்கள்

தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருக்கோயிலூரில் பண்டைய சுடுமண் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுடுமண் உருவம் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இச்சுடுமண் உருவத்தின், உருவ அமைப்பினை நோக்கும்போது, இத்துறை, போளுவாம்பட்டி, பனையகுளம் ஆகிய இடங்களில் கண்டுபிடித்துள்ள இயக்கன் உருவங்களின் உருவ அமைப்பினை ஒத்துள்ளது.

## 6. அரவக்குறிச்சிச் சுடுமண் படிமம்

*திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் படிமம், தாய், சேய் உருவமாகும். தாய்மைப் பாசம் பொங்கும் பாங்கில் வரையப்பட்டுள்ளது. தாயின் இடுப்பில் குழந்தை அமர்ந்துள்ள காட்சி இயற்கையழகுடன் மிளிர்கிறது. இச்சுடுமண் படிமம் பிற்காலச் சோழர் காலத்தை, அதாவது கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.*

## 7. பிற்காலப் பாண்டியர் ஓவியங்கள்

*காயிதே மில்லத் மாவட்டம் ஆத்தூருக்கு அருகில் உள்ள சித்தையன் கோட்டை என்னும் ஊரில் அமைந்துள்ள சிவன் கோயிலில் பாண்டியர் கால ஓவியங்கள் வரையப்பட்டிருப்பது இத்துறையால் கண்டறிப்பட்டது. இக்கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. பாண்டியர் கால அரசியல் அதிகாரியாக விளங்கிய அஞ்சாத பெருமாள் சேதிராயன் என்பவன் தனது தந்தை பெயரால் 'சேதிராயீசுவரமுடையார் கோயில்' என்ற இக்கோயிலை எடுப்பித்தான் எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவ்வூர் பாண்டியர் காலத்தில் வணிகர்களும் அவர்களைக் காத்து நிற்கும் வீரர்களும் தங்கிய இடமாக இருந்திருக்க வேண்டுமென்பதை 'எறிவீரதளம்' என்ற பெயர் சுட்டிக் காட்டுகிறது.*

*பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்த வண்ண ஓவியங்களில் தென்திசைக் கடவுள், ஆடவல்லான் ஆகிய தெய்வ உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட உருவங்கள் மஞ்சளும் வெண்மையும் கலந்த பழுப்பு நிற அடித் தளத்தின் மீது செம்மை நிறத்தில் மெல்லிய கோடுகளால் தீட்டப்பட்டுள்ளன.*

## 8. செக்கடிமேடு சுடுமண் பொம்மை

*தஞ்சாவூரில் செக்கடிமேடு என்ற இடத்தில் இருந்து 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராத்தியர் காலச் சுடுமண் பொம்மைகளை இத்துறை கண்டுபிடித்துச் சேகரித்துள்ளது. இந்த இடத்தில் அகழ்வாய்வினை மேற்கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.*

# EXCAVATIONS IN TAMILNADU

The Department of Archaeology was established in the year 1961, to protect and preserve the historical monuments of Tamilnadu. In course of time it has been expanded with more sections such as (1) Epigraphy (2) Excavation (3) Site Museums (4) Archaeological offices at District level (5) Registering offices (6) Printing (7) Archaeological Lab (8) Archaeological Library and (9) Photography.

**Excavations Conducted**

This department has conducted excavations at the following sites :

| | | |
|---|---|---|
| 1 | Anamalai | Coimbatore District |
| 2 | Poluvampatti | Coimbatore District |
| 3 | Korkai | V. O. C. District |
| 4 | Panchalankurichi | V. O. C. District |
| 5 | Karur | Trichy District |
| 6 | Kannanur | Trichy District |
| 7 | Gangaikonda-cholapuram | Trichy District |
| 8 | Palayarai | Tanjore District |
| 9 | Kurumbanmedu | Tanjore District |
| 10 | Kovalanpottal | Madurai District |
| 11 | Tondi | Ramanathapuram District |
| 12 | Alagankulam | Ramanathapuram District |
| 13 | Pallavamedu | Chengai Anna District |
| 14 | Vasavasamudram | Chengai Anna District |

## How to select a site for Excavation

In order to select a site for excavation one has to study the literature, history and inscriptions to find out ancient places such as capitals, ports and cities of ancient ruling monarchs and chieftains. Having listed out the ancient cities, the exploration will be carried out at the sites by the Archaeologists. They would enquire with the villagers if they have come acrossed any ancient structures or any antiquities. They will also explore the places thoroughly to find if there is any raised mound. If there is any raised mound, it means that there was an ancient habitation. Due to invasion of the rival kings, it is believed, that these places might have been either razed out or abandoned by the inhabitants. Sometimes the villagers could have collected some important artefacts while they plough in such raised mounds. If they dig pits they could have found some brick structures or the ring wells that are the clear indications for the habitation. The accidental finds occured in some places also led the archæologists to locate the sites of ancient period.

For example at Gangaikondacholapuram, in Trichy District, the villagers were able to dig cart-loads of bricks in every year while they start their cultivation at a particular site called Utkottai. This incident has been brought to the notice of this department. Immediately the Archæologist was deputed to do thorough exploration. During his exploration he was able locate a large mound spreading over to a stretch of 4 metre square.

After having done all the preliminary works, we started excavations and we were able to bring to light the palace built by Rajendra Chola, the illustrious son of Rajaraja the Great. Likewise we were able to locate an interesting site i.e. Alagankulam which is considered by the Archæologists as another Arikkamedu in Ramnad District.

## Four Important Sites

Among the excavated sites, Korkai in V. O. C. District, Karur and Gangaikondacholapuram in Trichy District, Alagankulam in Ramnad District are more important sites which have yielded excellent artefacts confirming the location of the ancient capitals, their relationship between South India and North India and between Tamil Nadu and Rome. The excavation at Korkai assumed great importance because the charcoal found in a trench during the excavation have been dated by the Tata Institute of Fundamental Research to a date of 785 B.C. plus or minus 100 thereby suggesting that the habitation at Korkai was in existence even from 800 B.C. So the antiquity of Korkai and Southern part of Tamil Nadu goes back to the period of Circa 1000 B C. The inscribed potsherds found from Korkai confirm that the script prevalent in Tamilnadu for writing Tamil language was in existence from 3rd century B.C. The excavation conducted at Karur and Gangaikondacholapuram revealed the antiquity of Karur which is believed by some scholars as the capital of Sangam Cheras and the

building exposed by the excavation at Gangaikondacholapuram to be the palace built by Rajendra Chola. The excavation at Alagankulam in Ramnad District has thrown light on the Roman settlement established at Alagankulam as was the one at Arikkamedu near Pondicherry.

## Large Scale Excavation

Since Alagankulam and Gangaikondacholapuram are very important sites to know the cultural heritage of Sangam and Medieval period, it is proposed to carry out a large scale excavation. It is expected that this excavation would throw more light on the mode of life of the people such as their day-to-day life, their industry, their religion, the administration etc.

## New Sites to be Excavated

Still there are a number of sites to be excavated in Tamilnadu, such as Tirukkoilur, the capital of Malayaman; Padaividu, the capital of Sambuvarayar; Parthivasekarapuram, the capital of Ay Kings; Tiruttangal, a site belonging to Sangam age etc.

## Under Sea Archaeology

The sphere of excavation has now been extended to off the seashore. Tamilnadu is famous for a number of ports on the Eastern sea coast. The ports of Sopatma,

Kavirippumpattinam, Tranquebar, Karaikkal; Periya-pattinam and Kanyakumari are mentioned in the chronicles of foreign travellers as well as in Sangam literature. Kavirippumpattinam is said to have submerged under sea. Hence, a preliminary exploration has been conducted by the Archaeology Department in collaboration with the National Institute of Oceanography, Goa. By engaging some sophisticated equipments it has spotted some heaps in about 30 metre depth off the shore of Poompuhar. For further exploration and excavation it requires more fund and trained personnel. The heaps located in the preliminary exploration are said to have belonged either to Sangam age or even to Pre-Sangam period.

On this basis the Honourable Chief Minister of Tamilnadu Dr. M. Karunanidhi, has in his 1990-91 budget speech, enunciated a three year project work of Marine Archaeology, off the Coast of Poompuhar in coordination with the National Institute of Oceanography, and earmarked sufficient funds for this prestigious project.

# RECENT FINDINGS OF THIS DEPARTMENT

## 1a. Archaic Tamil Inscription

An Archaic Tamil (Tamil-Brahmi) inscription was discovered by this department on a hill known as Undankallu in Nilakkottai Taluk, of Quaid-E-Millad District. This inscription reads as "Erayal Arakayadan Sevvithon" The meaning of this inscription is that the bed where the inscription is engraved is the gift of Arakayadan of Erayal Village. On the basis of the palaeography this inscription is assignable to 2nd-3rd century A.D.

## 1b. Tamili Inscription

In the village Thirumalai of the Pasumpon Thevar Thirumagan District, this Department has discovered ancient Tamil Brahmi incriptions on the lintel of two natural caverns. The inscription on the first cave records the detail that the bed was caused to be made by one Kavithikan belonging to Ekatur.

## 2a. Pallava Sculpture

A rare pallava sculpture with the aspects of Siva, Vishnu and Brahma in Ponnur village of North Arcot District and a stone tub (11-12th century A.D.) with intricate carvings at Tiruvallam near Vellore were discovered.

## 2b. Panel Sculptures of Pallava period

In the prakara wall of the Abhirameswara temple in the village Thiruvamathur in Villupuram Taluk of South Arcot District an image probably depicting Lingodbhavar or Trimurthy is chiselled as a panel sculpture. On stylistic grounds the sculpture may be

assigned to 7th century Pallava idiom. In the centre of the sculpture is the figure of Lord Siva in the anthropomorphic Linga form flanked respectively on the left and the right sides, by Vishnu and Brahman.

### 3. Pallava Coin

An early Pallava coin made of lead was found in Tiruvanmiyur, a suburb of Madras. Figure of a standing humped bull is found on the obverse and a vase and the Chaitya tree are found on the reverse of this coin. It could be datable to a period of 5th-6th century A.D.

### 4. Gold Coins at Kurinjippadi

Seventy seven gold coins were discovered at Varadarajanpettai near Kurinjippadi in South Arcot District. These coins belong to Ganga, Kakatiya and Vijayanagara Kings. A few golden pieces and some golden bangles were also found along with these coins On one group of coins Tamil legend 'Ganapa' is written in typical Chola characters and the figures of sun, moon, umbrella and Venugopala in standing posture holding flute in his hands are all on the obverse; while some zigzag lines on the reverse. These are identified as the issues of Ganapati, the Kakatiya King

### 5. Discovery of Ancient Terracotta figures

A terracotta figure, anterior to 12 centuries (8th century A.D.) has been discovered at Thirukovilur of the same taluk of South Arcot district. The figure is similar in style to the Yaksha figures discovered by this department at Poluvampatti and Panayakulam.

**6. Later Pandya Paintings-Sittaiyankottai**

Some interesting paintings drawn on the wall of a Siva Temple of Sittaiyankottai near Attur in Quaid-E-Millad District, have been discovered by this department. It is understood that this temple was built during 13th century A.D. The inscription engraved on the pattika of the Northern wall mentions that the Sethirayisvaramudaiyar temple was built by an officer Anjada Perumal, in memory of his father. This village seems to have been a place of merchants and their guards as it is called 'Eriviratalam' in inscription.

The paintings, most probably of Later Pandya period depict the figures of Dakshinamurthy and Nataraja. They are drawn in lines in red ochre on the surface prepared by a mixtnre of white, yellow and brown pigments.

**7. Terracotta Figurine of Sekkadimedu**

Some outstanding specimens of Terracotta figurines datable to 18th century A.D. were collected from Sekkadimedu, a suburb of Tanjore by this department. The above terracottas were found during the exploration carried out in view of excavation to be held shortly.

**8. Aravakkurichi Terracotta Figure**

A mother - goddess terracotta figurine has been discovered at Aravakurichi in Trichy district. The figure exudes motherly affection. The child is held on the mother's hip in natural stance. This terrecotta figure of later Chola idiom, can be dated to 10th-11th century. A D.